**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093841

1. District மாவட்டம் : Dharmapuri PS: காவல்நிலையம் Vigilance and Anti-Corruption Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 1/AC/2019 Date: நாள் 15.2.2019

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 As amended by the PC (Amended) Act 2018 Sections பிரிவுகள்: 7 (a)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை January 2019 3rd week 12.2.2019 at 10.30 Am
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 15.2.2019 at 10.15 Am
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.2.2019 Time : நேரம் 12.30 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 15.2.2019 Time : நேரம் 12.30 Hrs

4. Type of Information : ~~Written~~/ Oral : Oral
   தகவலின் வகை : ~~எழுத்து மூலம்~~ / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Office of the Block Development Officer
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Nallampalli,
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Dharmapuri District, 12 km South approximately
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. M. Pachaiappan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Muniappan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 38 years (d) Nationality நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Drill Work (g) Address : முகவரி Old Indur Village, Indur (Post) Nallampalli Taluk, Dharmapuri District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Tr. Ayyavu, Overseer, Office of the Block Development Officer, Nallampalli, Dharmapuri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   -

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet is enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

எம்-பச்சியப்பன் -15-2-19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

S. Subramanian DSP 15/02/2019
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
Dy. Supt. of Police, VAC, Dharmapuri

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

15. 2. 2019 at 16.50 Hrs

Name: பெயர் S-SUBRAMANIAN
Rank: நிலை DSP ..........No. எண் ..........

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p.2

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/AC/2019, u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 As Amended By the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

** *** **

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், பழைய இண்டூர் கிராமத்தில் வசித்துவரும் முனியப்பன் மகன் திரு.M.பச்சியப்பன், வயது 38 என்பவர் இன்று 15.02.2019 ம் தேதி வெள்ளிக்கிழமை பகல் 12.30 மணிக்கு தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலத்தில் ஆஜராகி காவல் துணை கண்காணிப்பாளரிடம் வாய்மொழி புகார் ஒன்றை கொடுத்தார். மேற்படி புகாரை, புகார்தாரர் சொல்ல சொல்ல காவல் துணை கண்காணிப்பாளர் அதை தலைமைக் காவலர் திருமதி.G.ரம்யா அவர்களிடம் சொல்லி, கம்யூட்டரில் பதிவு செய்து, பின்னர் புகாரை படித்து காண்பித்தார். புகார்தாரர் சரியென ஒப்புக் கொண்டதின்பேரில், அந்த புகாரின் அடிப்படையில் எதிரியின் பொதுவான நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் சரியில்லை என்றும் புகார்தாரின் முன் நடத்தை மற்றும் அவருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதும் இல்லையென்றும் அவருடைய புகார் நம்பக தன்மை கொண்டது என்றும் தெரியவந்ததால் புகார் வாக்குமூலத்தின் தன்மைபடி இன்று 15.02.2019 ம் தேதி பகல் 14.00 மணிக்கு தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/AC/2019, u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 As Amended By the Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரரின் புகார் வாக்குமூலத்தின் விவரம் பின்வருமாறு.

நான் தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், இண்டூர் அஞ்சல், பழைய இண்டூர் கிராமம் என்ற முகவரியில் குடும்பத்துடன் குடிசைவீட்டில் குடியிருந்து வருகிறேன். நான் டிராக்டர் கம்ப்ரசர் வண்டியில் பாறைகளுக்கு துளை போடும் வேலை செய்து வருகிறேன். நான் குடியிருக்கும் குடிசை வீடானது எனது அப்பா முனியப்பன் பெயரில் நத்தஅள்ளி வருவாய் கிராமத்தில் சர்வே எண்.337ல் பட்டா எண்.581ல் இருக்கிறது. நான் பிரதமர் குடியிருப்பு திட்டத்தின் கீழ் வீடு வேண்டி 2016 ஆம் ஆண்டு இண்டூர் ஊராட்சி செயலாளரிடம் எனது ஆதார் அட்டை நகல், ரேசன் கார்டு நகல், வாக்காளர் அடையாள அட்டை நகல், வீட்டு வரி ரசீது மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கணக்கு புத்தக நகல் ஆகியவற்றை கொடுத்தேன். இந்த பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் சமூக பொருளாதார கணக்கெடுப்பு பட்டியலில் முன்னுரிமையின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு, எனக்கு ரூ.1.70 லட்சம் மதிப்பீட்டில் வீடு

கட்டுவதற்கு 18.04.2017 தேதியிட்ட மின்னனு அனுமதி ஆணையை ஒரு வாரம் கழித்து பஞ்சாத்து செயலாளர் வழங்கினார். அதன்பின்பு நான் வீடு கட்டுவதற்கான பேஸ் மட்ட வேலைகளை ஆரம்பித்தேன். அதன்பிறகு எனக்கு பேஸ்மட்ட லெவலுக்கு ரூ.26,029/-ம், மெட்ரியலுக்காக ரூ.16,300/-ம், லின்டல் லெவலுக்கு ரூ.26,715/-ம் அடுத்து ரூப் லெவலுக்கு ரூ.26,681/-ம், கம்லிட் லெவலுக்கு ரூ.40,575/-ம் ஆக மொத்தம் ரூ.1,36,300/-, இந்தியன் ஓவர் சீஸ் வங்கி, இண்டூர் கிளையில் உள்ள எனது கணக்கில் வரவு வைக்கப்பட்டது. எனது மனைவி திருமதி.பழனியம்மாள் மீதித்தொகை குறித்து கேட்க வேண்டி, 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கடைசி வாரத்தில் நல்லம்பள்ளி ஓவர்சீர் அய்யாவு அவர்கள் கேட்டு கொண்டதின் பேரில் வீடு கட்டிய போட்டோவுடன் சென்று அவரை பார்த்தார். அப்போது ஓவர்சீர் அவர்கள் என் மனைவியிடம் வீட்டின் போட்டோவை வாங்கி கொண்டு, உனது கணவர் பெயரில் தான் வீடு கட்ட அனுமதி உள்ளது. உன் கணவரை வந்து என்னை பார்க்க சொல் என்று சொல்லி அனுப்பிவிட்டார். என் மனைவி என்னிடம் வந்து சொன்னதின் பேரில், நான் சென்ற ஜனவரி மாதம் 3 – ம் வாரம் பொங்கல் கழித்து ஒருநாள் நல்லம்பள்ளி பி.டி.ஓ ஆபிஸ் சென்று ஓவர்சீர் அய்யாவு அவர்களை சந்தித்து, வீடு கட்டி முடித்ததற்கான கடைசி பில் பற்றி கேட்டேன். அதற்கு அவர் பில் எல்லாம் ரெடியா இருக்கிறது. ரூ.2,000/- கொடுத்தால்தான் இறுதி தொகைக்கான பில்லை பாஸ் செய்வதற்கு ஏற்பாடு செய்வேன். இதுவரைக்கும் உனக்கு வழங்கப்பட்ட தொகைக்கு நீ எந்த பணமும் எனக்கு கொடுக்கவில்லை என்று சொன்னார். அதற்கு நான் என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன்பிறகு 12.02.2019 அன்று காலை சுமார் 10.30 மணிக்கு நல்லம்பள்ளி பி.டி.ஓ ஆபிஸ் சென்று ஓவர்சீர் அய்யாவு அவர்களை சந்தித்து எனது பில் பற்றி கேட்டேன். அதற்கு அவர் நீ பணம் ரூ.2,000/- எனக்கு கொடுத்தால் தான் பில் பாஸ் பண்னுவேன் என்று சொன்னார். அப்போது பணம் இல்லாததால் வந்துவிட்டேன். மீண்டும் நான் இன்று 15.02.2019 ஆம் தேதி காலை சுமார் 10.15 மணிக்கு நல்லம்பள்ளி பி.டி.ஓ ஆபிஸ் சென்று ஓவர்சீர் அய்யாவு அவர்களை சந்தித்து, மீண்டும் வீடு கட்டி முடித்ததற்கான கடைசி பில் பற்றி கேட்டேன். அதற்கு அவர் நீ பணம் ரூ.2,000/- எனக்கு கொடு அப்போது தான் பில் அனுப்பி வைக்கிறேன் என்று சொன்னார். அதற்கு நான் என்னால அவ்வளவு பணம் கொடுக்க வசதி இல்லை சார் என்று சொன்னதற்கு, அவர் பணம் ரூ.1,500/- ஏற்பாடு செய்துகொண்டு எப்ப வேண்டுமானாலும் வந்து என்னை பார், அப்போதுதான் பில் அனுப்ப முடியும் என்று முடிவாக சொல்லிவிட்டார். ஆகவே நல்லம்பள்ளி பி.டி.ஓ ஆபிசில் ஓவர்சீராக பணிபுரியும் திரு.அய்யாவு அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.1,500/- ஐ கொடுத்து எனது வேலையை முடிக்க எனக்கு விருப்பமில்லை. எனவே அவர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.1,500/- வுடன் அவரை சந்திக்க தயாராக உள்ளேன். அதனால்

19

நல்லம்பள்ளி பி.டி.ஓ ஆபிசில் ஓவர்சீராக பணிபுரியும் திரு.அய்யாவு அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேற்படி புகாரை நான் சொல்ல சொல்ல காவல் துணை கண்காணிப்பாளர் அதை தலைமைக் காவலர் திருமதி.G.ரம்யா அவர்களிடம் சொல்லி, கம்யூட்டரில் பதிவு செய்தார். புகாரை படித்து காண்பித்தார். நான் சொன்னபடி சரியாக உள்ளது. ஒப்பம் திரு.M.பச்சியப்பன், 15.02.2019.

S. [signature]
DSP, VAC,
Dharmapuri
(S-SUBRAMANIAN)
15.02.2019

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், இண்டூர் அஞ்சல், பழைய இண்டூர் கிராமம், என்ற முகவரியைச் சேர்ந்த முனியப்பன் மகன் திரு.M.பச்சியப்பன், வயது 38 என்பவர் இன்று 15.02.2019 ம் தேதி பகல் 12.30 மணிக்கு தருமபுரி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி காவல் துணை கண்காணிப்பாளர் முன்னிலையில் வாய்மொழியாக கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு.

** *** **

நான் தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், இண்டூர் அஞ்சல், பழைய இண்டூர் கிராமம் என்ற முகவரியில் குடும்பத்துடன் குடிசைவீட்டில் குடியிருந்து வருகிறேன். நான் டிராக்டர் கம்ப்ரசர் வண்டியில் பாறைகளுக்கு துளை போடும் வேலை செய்து வருகிறேன். நான் குடியிருக்கும் குடிசை வீடானது எனது அப்பா முனியப்பன் பெயரில் நத்தஅள்ளி வருவாய் கிராமத்தில் சர்வே எண்.337ல் பட்டா எண்.581ல் இருக்கிறது. நான் பிரதமர் குடியிருப்பு திட்டத்தின் கீழ் வீடு வேண்டி 2016 ஆம் ஆண்டு இண்டூர் ஊராட்சி செயலாளரிடம் எனது ஆதார் அட்டை நகல், ரேசன் கார்டு நகல், வாக்காளர் அடையாள அட்டை நகல், வீட்டு வரி ரசீது மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கணக்கு புத்தக நகல் ஆகியவற்றை கொடுத்தேன். இந்த பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் சமூக பொருளாதார கணக்கெடுப்பு பட்டியலில் முன்னுரிமையின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு, எனக்கு ரூ.1.70 லட்சம் மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கு 18.04.2017 தேதியிட்ட மின்னனு அனுமதி ஆணையை ஒரு வாரம் கழித்து பஞ்சாத்து செயலாளர் வழங்கினார். அதன்பின்பு நான் வீடு கட்டுவதற்கான பேஸ் மட்ட வேலைகளை ஆரம்பித்தேன். அதன்பிறகு எனக்கு பேஸ்மட்ட லெவலுக்கு ரூ.26,029/-ம், மெட்ரியலுக்காக ரூ.16,300/-ம், லின்டல் லெவலுக்கு ரூ.26,715/-ம் அடுத்து ரூப் லெவலுக்கு ரூ.26,681/-ம், கம்லிட் லெவலுக்கு ரூ.40,575/-ம் ஆக மொத்தம் ரூ.1,36,300/-, இந்தியன் ஓவர் சீஸ் வங்கி, இண்டூர் கிளையில் உள்ள எனது கணக்கில் வரவு வைக்கப்பட்டது. எனது மனைவி திருமதி.பழனியம்மாள் மீதித்தொகை குறித்து கேட்க வேண்டி, 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கடைசி வாரத்தில் நல்லம்பள்ளி ஓவர்சீர் அய்யாவு அவர்கள் கேட்டு கொண்டதின் பேரில் வீடு கட்டிய போட்டோவுடன் சென்று அவரை பார்த்தார். அப்போது ஓவர்சீர் அவர்கள் என் மனைவியிடம் வீட்டின் போட்டோவை வாங்கி கொண்டு, உனது கணவர் பெயரில் தான் வீடு கட்ட அனுமதி உள்ளது. உன் கணவரை வந்து என்னை பார்க்க சொல் என்று சொல்லி அனுப்பிவிட்டார். என் மனைவி என்னிடம் வந்து சொன்னதின் பேரில், நான் சென்ற ஜனவரி மாதம் 3 – ம் வாரம் பொங்கல் கழித்து ஒருநாள் நல்லம்பள்ளி பி.டி.ஓ ஆபிஸ் சென்று ஓவர்சீர் அய்யாவு அவர்களை சந்தித்து, வீடு கட்டி முடித்ததற்கான கடைசி பில் பற்றி கேட்டேன். அதற்கு அவர் பில் எல்லாம் ரெடியா இருக்கிறது. ரூ.2,000/- கொடுத்தால்தான் இறுதி தொகைக்கான பில்லை பாஸ் செய்வதற்கு ஏற்பாடு செய்வேன். இதுவரைக்கும் உனக்கு வழங்கப்பட்ட

தொகைக்கு நீ எந்த பணமும் எனக்கு கொடுக்கவில்லை என்று சொன்னார். அதற்கு நான் என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன்பிறகு 12.02.2019 அன்று காலை சுமார் 10.30 மணிக்கு நல்லம்பள்ளி பி.டி.ஒ ஆபிஸ் சென்று ஓவர்சீர் அய்யாவு அவர்களை சந்தித்து எனது பில் பற்றி கேட்டேன். அதற்கு அவர் நீ பணம் ரூ.2,000/- எனக்கு கொடுத்தால் தான் பில் பாஸ் பண்ணுவேன் என்று சொன்னார். அப்போது பணம் இல்லாததால் வந்துவிட்டேன். மீண்டும் நான் இன்று 15.02.2019 ஆம் தேதி காலை சுமார் 10.15 மணிக்கு நல்லம்பள்ளி பி.டி.ஒ ஆபிஸ் சென்று ஓவர்சீர் அய்யாவு அவர்களை சந்தித்து, மீண்டும் வீடு கட்டி முடித்ததற்கான கடைசி பில் பற்றி கேட்டேன். அதற்கு அவர் நீ பணம் ரூ.2,000/- எனக்கு கொடு அப்போது தான் பில் அனுப்பி வைக்கிறேன் என்று சொன்னார். அதற்கு நான் என்னால அவ்வளவு பணம் கொடுக்க வசதி இல்லை சார் என்று சொன்னதற்கு, அவர் பணம் ரூ.1,500/- ஏற்பாடு செய்துகொண்டு எப்ப வேண்டுமானாலும் வந்து என்னை பார், அப்போதுதான் பில் அனுப்ப முடியும் என்று முடிவாக சொல்லிவிட்டார். ஆகவே நல்லம்பள்ளி பி.டி.ஒ ஆபிசில் ஓவர்சீராக பணிபுரியும் திரு.அய்யாவு அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.1,500/- ஐ கொடுத்து எனது வேலையை முடிக்க எனக்கு விருப்பமில்லை. எனவே அவர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.1,500/- வுடன் அவரை சந்திக்க தயாராக உள்ளேன். அதனால் நல்லம்பள்ளி பி.டி.ஒ ஆபிசில் ஓவர்சீராக பணிபுரியும் திரு.அய்யாவு அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேற்படி புகாரை நான் சொல்ல சொல்ல காவல் துணை கண்காணிப்பாளர் அதை தலைமைக் காவலர் திருமதி.G.ரம்யா அவர்களிடம் சொல்லி, கம்யூட்டரில் பதிவு செய்தார். புகாரை படித்து காண்பித்தார். நான் சொன்னபடி சரியாக உள்ளது.

M-பச்சியப்பன்

15-2-2019

Sir, The oral statement of the Informant was recorded by me in the office Computer today 15-02-2019 between 12.30 to 1300hrs read over to him and it was admitted to be Correct.

S. Shnmmi [signature] 15-02-2019
DSP, VAC, Dharmapuri

Further, a quite and quick verification on the general reputation of the

accused was made confidentially and it is learnt to be not good. Similarly the motives, reliability and the antecedents of the informant was carfully checked and assessed and nothing adverse came to notice. Therefore, after getting prior concurrence from the Directorate of Vigilance Anti-Corruption, Chennai. A case in Dharmapuri VAC Cr.No 01/AC/2019 u/s 7(a) of the Prevention Act 1988 as Ammended by the PC (Ammenment) Act 2018 was registered today 15.02.2019 at 1400hrs against the accused. The original FIR and the oral statement of the informant was sent to the Hon'ble court of special Judge/ CJM, Dharmapuri. The remaining copies were sent to the officers concerned.

S. Shanmuga [signature]
DSP, VAC, Dharmapuri
(S. SUBRAMANIAN)
15.02.2019